**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ம் நாள் புதன்கிழமை

**இ.ம.எண்.22/2026 அதன் இ.ம.எண்.20/2026**

**அதன் அ.வ.எண்.227/2010**

1) முகைதீன் அப்துல் காதர்
2) முபாராக் அலி
3) முகைதீன் மீரா
4) ஆசியா பீவி
5) முகம்மது யாசீன்
6) ஹமீது பாத்திமாள்
7) அபுபக்கர்
8) ஜபருல்லா
9) இஸ்மத் நிஷா
10) ரம்சான் பசீர்
11) மெஹர்பானு
12) முகம்மது அபுபக்கர்
13) அஸ்மா பீவி
14) ஆரிபா
15) மீரான் முகைதீன்
16) அபுபக்கர் சித்திக்
17) ஹயாத்
18) ரம்சான் நூராணி
19) அப்துல் காதர்
20) சம்சுதீன்
21) ராக்கமாள்
22) சங்கரம்மாள்
23) பலவேசத் தேவர் (இறப்பு)
24) இஸ்மத் யூனூன்
25) நாச்சியார்
26) ஹிதாய ரசூல்

மேற்படியார்களின் அதிகார பூர்வ
முகவரான இஸ்மத் யூனூன் மூலம்
27) வீரபத்திரன்
28) பாலசுப்பிரமணியன் ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள் 2 முதல் 6, 9 முதல் 22, 24 முதல் 27, 29, 30, 32, 33

–எதிர்–

1). பிச்சையா
2). முத்துப்பாண்டி (இறப்பு)
3) கணபதித் தேவர் (இறப்பு)
4) சந்தணமாரி
5) சுடலை என்ற சிவா
6) சண்முகவேல்
7) இசக்கி சங்கர் என்ற மணி
8) பேச்சியம்மாள் (இறப்பு)
9) ராமலெட்சுமி
10) மல்லிகா (எ) சங்கரம்மாள்
11) சண்முகத்தாய்
12) முத்துலட்சுமி
13) சுந்தரம்
14) பேச்சுத்தாய்
15) தங்கவேல்
16) சண்முகத்தாய்
17) இசக்கி (எ) முத்துபாண்டி
மேற்படி இளவரின் பாட்டியும்,
அடுத்த நண்பருமான 4 ம் எதிர்மனுதாரர்/
வாதி சந்தனமாரி அவர்கள் மூலம்
18) சுப்பிரமணியன்
19) சாகுல் ஹமீது
20) மைனர் குல்ஷன் பேகம்
மேற்படியாரின் தாயாரும் காப்பாளருமான
கதீஜா மூலமாக
21) அருணாசலம்
22) சரஸ்வதி
23) சரஸ்வதி ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள் / 1, 7, 8, 23, 31 பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பாக 29.04.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கிருஷ்ணராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ஞானியார் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

## உத்தரவு

இம்மனுவானது, மனுவில் குறிப்பிட்டிருக்கும் விபரங்களை இ.ம.எண்.20/2026–ல் சீர்திருத்தம் செய்ய அனுமதி அளித்து உத்தரவிடக் கோரி மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17 –ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2) மனுவின் சுருக்கம்

மனுதாரர் தரப்பில், அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கில் பதில் வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், மேற்படி வாதுரை தயார் செய்வதற்காக வழக்கு கோப்பை பார்வையிட்டதில், மனுதாரர்கள் தரப்பு கட்சியை நிரூபிக்கும் வகையிலான ஆவணங்கள் குறியீடு செய்யாமல் விடுபட்டுள்ள விபரம் தெரிய வந்தது என்றும், எனவே, ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி இ.ம.எண்.20/2026 மனு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி மனுவில் என்னென்ன ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுமென விபரம் பற்றி தெரிவிக்காமல் போய் விட்டது என்றும், எனவே, வீரபத்திர தேவர் இறப்பு சான்றிதழ், உச்சினிமாகாளி இறப்பு சான்றிதழ், சார்பதிவாளர் நகல், ராக்கம்மாள், சங்கரம்மாள் ஆகியோர் பிறப்பித்துக் கொடுத்த பொது அதிகார ஆவணம் ஆகியவைகள் பற்றி இ.ம.எண்.20/2026 ல் குறிப்பிட அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

**3) எதிருரை சுருக்கம்**

மனுதாரரின் மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், அசல் வழக்கில் இறுதி தீர்வு ஏற்படுவதை மனுதாரர்கள் தாமதப்படுத்தும் நோக்கிலும், அவர்கள் தங்களது தவறை சரி செய்யும் விதமாகவும், தற்போது மேற்படி ஆவணங்கள் குறித்து அம்மனுவில் தெரிவிக்கும் விதமாக சீர்திருத்தம் செய்யக் கோரும் இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

4) இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) **இந்த மனுவை பொறுத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர்கள் கோரியவாறு இம்மனுவில் கண்டவாறு இ.ம.எண்.20/2026 மனுவை சீர்திருத்தம் செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.**

6) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

7) இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கின் 2 முதல் 6, 9 முதல் 22, 24 முதல் 27, 29, 30, 32, 33 பிரதிவாதிகள் ஆவார்கள். இம்மனுவின் 1 முதல் 17 எதிர்மனுதாரர்கள் வாதிகள் ஆவார்கள். இம்மனுவின் 18 முதல் 23 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கின் 1, 7, 8, 23, 31 பிரதிவாதிகள் ஆவார்கள். அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் அசல் வழக்கில் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக இ.ம.எண்.20/2026 தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி இ.ம.எண்.20/2026ல் என்னென்ன ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுமென்ற விபரம் பற்றி தெரிவிக்கவில்லை என்றும், எனவே, மனுவில் ஆவணங்களின் விபரத்தை பற்றி குறிப்பிட அனுமதித்து சீர்திருத்த செய்ய வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

8) மேலே விவாதித்த சங்கதிகளை பரிசீலனை செய்கையில், வீரபத்திர தேவர் இறப்பு சான்றிதழ், உச்சினிமாகாளி இறப்பு சான்றிதழ், சார்பதிவாளர் நகல், ராக்கம்மாள், சங்கரம்மாள் ஆகியோர் பிறப்பித்துக் கொடுத்த பொது அதிகார ஆவணம் ஆகியவைகள் பற்றி இ.ம.எண்.20/2026ல் சீர்திருத்தம் செய்ய இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித இழப்பும் ஏற்படப்போவதில்லை என்பதாலும், மேலும் இந்த வழக்கானது 15 ஆண்டுகளுக்கு மேல் நிலுவையில் உள்ளதாலும், மனுதாரர்களுக்கு அவர் தரப்பு வழக்கை நிரூபிக்க ஒரு வாய்ப்பு வழங்கும் நிலையிலும், மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும், நீதியின் நலனைக் கருதியும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

orders uploded on 29.04.2026.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.04.29 18:21:45 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் </u>- இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் </u>- இல்லை

MARIMUTHU R MUNIYASAMY
orders uploded on 29.04.2026.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.04.29 18:21:51 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி.

முதன்மை மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**<u>இ.ம.எண்.22/2026 அதன்</u>**

**<u>இ.ம.எண்.20/2026 அதன்</u>**

**<u>அ.வ.எண்.227/2010</u>**

சீரான/ வரைவு – உத்தரவு

**<u>29.04.2026.</u>**